Registered No. M-4433. Madras War Review (TAMIL) 11-8-1944

யுத்த சஞ்சிகை

மலர் IV 1944-ம் ஆகஸ்ட்டு 11௳, வெள்ளிக்கிழமை இதழ் 49

14-வது வீரப் படைக்கு வாழ்த்து

☆

இந்த யுத்தத்தில் பல மகா கடுமையான சேவைகள் புரிந்துள்ள பிரிட்டிஷ் 14 வது படையினருக்கு இந் நாடு நன்றி செலுத்த வேண்டும்

மிஸ்டர் சர்ச்சில்
ஆகஸ்டு மாதம் 2-ம் தேதி
லண்டனில் கூறியது



மிஸ்டர் சர்ச்சில்.

பொருளடக்கம்.

	பக்கம்.
முகப்புப் படம் : மிஸ்டர் சர்ச்சில்	1
14-வது வீரப் படைக்கு வாழ்த்து	1
பாட்டு : அச்சுப் படைகளின் அலங்கோலம் ..	2
தலையங்கம் : உலக நிலையும் மகா தந்திரியும் ..	3
போர் முனை நிகழ்ச்சி விளக்கம்	4
14-ம் படைக்குப் பெருமிதமான வரவேற்பு ..	5
ஆசைப்பட்டது ஊசிப் போச்சு	7

	பக்கம்.
வானொலி நாட் குறிப்புக்கள்	8
அங்கும் இங்கும்	9
மாகாண அரசாங்கக் கடன்கள்	10
ஏற்ற இலாபந் தரத் தக்க முதலீடு	10
100-க்கு 3 வட்டி சென்னை அரசாங்க கடன் ..	11
யுத்த நாட் குறிப்புக்கள்	12

அச்சு நாடுகளின் அலங்கோலம்

"ஐயா சிறு பெண் ஏழை என் மேல் அகங் கனியாதா"—மெட்டு.

பல்லவி

எங்கும் வெற்றி நேசநாட்டிற் காகுது பாரு—அச்சு
பங்கமுற்றுத் தோல்வியாலே நோகுது பாரு—பிணமாய்ச்
சாகுது பாரு (இப்போ எங்)

சரணம்

1 ஆரம்பத்தில் அச்சு நாடு அடைந்தது வெற்றி—நேச
நாட்டினைச் சுற்றி—இப்போ
அடிபட்டுத்தான் ஓடுபார் உடலது வற்றி—ஹிட்லர்
அலறுகின்றான் நாடிழந்து குடலது பற்றி—இன்று
குடலது பற்றி (இப்போ எங்)

2 அடக்குவா ரற்ற வெறியன் ஆதிக்கம் போலே—வெறியன்
ஆதிக்கம் போலே—ஹிட்லர்
அதிகாரத்தைச் செலுத்தினானை ரோப்பாவின் மேலே—இன்று
அடங்கிவிட்டான் நேசநாட்டின் ஆற்றலின் கீழே—நேச
ஆற்றலின் கீழே (இப்போ எங்)

3 குள்ளனுமே துள்ளினான் கொஞ்ச நாளைக்கு முன்னே—கொஞ்ச
நாளைக்கு முன்னே—ஜப்பான்
அல்லலுற்று ஓடுகின்றான் அஞ்சியே பின்னே—இனிமேல்
எள்ளளவும் ஜெயமென்பது இவனுக்கே தண்ணே—இனி
இவனுக்கே தண்ணே (இப்போ எங்)

4 ஜெர்மன் ஜப்பான் ஜம்பம் இனிச் செல்லாது அண்ணே—நம்மை
வெல்லாது அண்ணே—இத்தாலி
செறுக்கடங்கி விட்டது செயல் இல்லாது அண்ணே—இந்த
ஜெகமதிலே அச்சின் கொள்கை பொல்லாது அண்ணே—நெடுநாள்
நில்லாது அண்ணே (இப்போ எங்)

5 ஆனைக்கு முன் பூனை நிகர் ஆகுமோ பாரும்—நிகர்
ஆகுமோ பாரும்—நேசச்
சேனையை இவ்வச்சுப் படை ஜெயிக்குமோ தேறும்—இதை
ஏனையோர்க்கும் தெளிவுபட எடுத்துமே கூறும்—நீரும்
எடுத்துமே கூறும் (இப்போ எங்)

யுத்த சஞ்சிகை

வார வெளியீடு

மலர் IV 1944-ம் ஆகஸ்ட்டுமீ 11உ, வெள்ளிக்கிழமை இதழ் 49

உலக நிலையும் மகா தந்திரியும்

சென்ற வாரம் மிஸ்டர் சர்ச்சில் பார்லிமெண்ட் சபையில் யுத்த நிலைபற்றி ஒரு சிறந்த பிரசங்கம் செய்தார். அவருடைய மொழிகளில் வெற்றிச் சின்னம் ஒலித்தது. எனினும் யுத்தப் போக்கின் பல கட்டங்களிலுமுள்ள பெருங் கஷ்டங்களையும் பற்றி அவர் எச்சரித்தார். யுத்தம் ஆரம்பமாகி முதல் 2 வருஷங்களுக்குள் பிரான்ஸ் தோற்றது. அப்போது பிரிட்டன் தனித்து நின்று கடுங்கோபத்தோடு போராடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்போது ஊக்கங் கொடுத்தவர் மிஸ்டர் சர்ச்சில் தான். அந்தக் காலத்தில் ஜனநாயகக் கூச்சல் இட்டவர் அவர் தான். அவருடைய பேச்சுக்கள் மகா ஊக்கந் தருவன. எந்தக் காரியத்தையும் குறிப்பிட்ட காலத்தில் செய்து முடிக்கத் தக்கபடி மிகவும் ஜாக்கிரதையுடன் திட்டம் வகுப்பதில் மிகவும் சமர்த்தர். தன் கடமையை நிறைவேற்றுவதில் எவ்வளவு பெருங் கஷ்டத்தையும் பொருட்படுத்தாதவர். இப்படிப்பட்டவர் இப்போது என்ன சொல்லுகிறார்: "ஹிட்லரைத் தோற்கடித்த பிறகு எவ்வளவு காலத்திற்குள் ஜப்பானைத் தோற்கடிக்கக் கூடுமென்று நினைத்துக் கொண்டிருந்தேனோ, அதைவிட மிகச் சீக்கிரத்திலேயே தோற்கடித்துவிடலா மென்று நான் நம்பிக்கை கொண்டிருக்கிறேன்". இந்த உலக யுத்த சரித்திரம் எழுதப்படும் காலத்தில், மிஸ்டர் சர்ச்சிலின் அஞ்சா நெஞ்சத்தைக் குறித்தும், அவருக்கு நாம் எவ்வளவு தூரம் கடமைப் பட்டிருக்கிறோ மென்றும் கட்டாயம் எழுதி வைப்பார்கள்.

ஜெர்மன் படைகளை எதிர்த்துத் தனித்து நின்ற போது, அவர் கூறிய மொழிகள் ஊன்றிக் கவனிக்கத் தக்கன: "பிரிட்டிஷ் மக்கள் கடற்கரைகளிலும், சிறு கிராமங்களிலும், சந்து பொந்துகளிலுமிருந்து போராடுவார்கள்" என்று அவர் கூறினார். இப்போது அத்தகைய போராட்டம் நடைபெறுவது இங்கிலாந்திலல்ல; ஆனால், ஹிட்லருடைய அசைக்கமுடியாத கோட்டை யென்று கருதப்பட்டு வந்த ஐரோப்பாவில் தான். பால்டிக் நாடுகளில் 20 ஜெர்மன் டிவிஷன்கள் அடியோடு தோற்கடிக்கப்பட்டன. 10 டிவிஷன் படைகள் பின்லாந்தில் சரணாகதி யடைய வேண்டும் அல்லது அடியோடு கொல்லப்பட வேண்டும். துருக்கியிலிருந்து கிடைத்துக் கொண்டிருந்த க்ரோம் இப்போது ஜெர்மனிக்குக் கிடைப்பதில்லை. எல்லாப் போர்ரங்கங்களிலும் பெரும்படைகள் எதிர்த்துக் கொண்டிருக்கின்றன. கிழக்கே ரஷ்யப் பெரும் படை; தெற்கே இத்தாலியில் எல்லா நேசநாட்டுப் படைகளும் சேர்ந்து கொண்டு எதிர்க்கின்றன; மேற்கே பிரான்சில் பிரிட்டிஷ் அமெரிக்கப் படைகள். போதாக் குறைக்கு இரவும் பகலும் ஓயாது விமானங்களிலிருந்து ஜெர்மன் நாடுகளில் குண்டுமாரி பெய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டமான நிலைமையைச் சமாளித்துக் கொண்டிருப்பவர் முகம் இஞ்சி தின்ன குரங்கின் முகத்தைப் போலத் தானே இருக்கும்.

நமக்கு அதிர்ஷ்ட காலம்.

எனவே தான், ஜெர்மன் படைத் தலைவர்கள் புரட்சி செய்ய ஆரம்பித்தார்கள். வீண் டம்பத்தினாலும், பீத்திக் கொள்ளுவதனாலும், கொடுமையினாலும், அக்கிரமத்தினாலும், பொய் கூறுவதனாலும், தன் வாக்கை நிறைவேற்றுததனாலும் யுத்தத்தில் வெற்றிபெற முடியா தென்பதை ஹிட்லர் உணர்ந்து கொள்ளவில்லை. மகா பொறுமையோடும் முன் யோசனையோடும் நமது முதன் மந்திரி வகுத்த நெடுங் காலத் திட்டம் தான், சரியான திட்டம் என்று தெளிவாகி விட்டது.

மிஸ்டர் சர்ச்சில் பார்லிமெண்ட் சபையில் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போதே, பிரஞ்சு நாட்டின் பல பகுதிகளை நேசப்படைகள் மீட்டுக் கொண்டு வருகின்றன. தெற்கு நோக்கி பிரிட்டனிக்குக் குறுக்கே புகுந்து கிழக்கே திரும்பி கெய்னுக்குத் தெற்கே நேசப் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. மிஸ்டர் சர்ச்சில் சொன்னார்: "ஆள் பலத்திலும், தளவாட பலத்திலும், விமான பலத்திலும் எதிரியைவிட நாம் பெரிதும் மிஞ்சி யிருக்கிறோம். விரைவாகப் படைகளைச்செலுத்திக் கொண்டு போவதிலும் மிஞ்சி யிருக்கிறோம்." இவரது வார்த்தைகள் ஒரு வாரத்திற் குள்ளாகவே பலித்து விட்டன. ஜெனரல் மண்ட்காமரி பிரான்சில் ஒரு ஆப்பில் மரத்தடியில் நின்று கொண்டு புன்முறுவலுடன் பத்திரிகைக்காரர்களிடம் கூறியதாவது:—

"இவை எல்லாவற்றையும் குறித்து நான் திருப்தியும் மகிழ்ச்சியு மடைகிறேன்."

இன்னும் கொஞ்ச நாட்கள் வரை ரோமலும் திறந்த வெளியில் நின்று கொண்டு பேசமுடியாது. ஏனென்றால், பிரிட்டிஷ் விமானிகள் உதிர்த்துவிட்ட ஆப்பில் பழம் (வெடிகுண்டு) அவர் மேல் விழுந்ததன் பயனாக, அவர் படுத்த படுக்கையிலிருக்கிறார்.

ஜப்பான் தோல்விக்கு அறிகுறி.

நமது பிரதம மந்திரி தன் பிரசங்கத்தின் முகவுரையிலேயே கீழக்கோடி நாடுகளில் நடைபெறும் போராட்டத்தைக் குறித்துக் கூறியிருக்கிறார். "ஹிட்லர் தோல்விக்குப் பிறகு, ஜப்பானின் தோல்விக்கு எவ்வளவு காலம் பிடிக்கு மென்று நான்

நீண்டதேனே, அவ்வளவு காலம் இப்போது பிடிக்காது என்றுணர்ந்து நான் பெரிதும் சந்தோஷமடைகிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

மியிட்கியானா, டாமு ஆகிய இவ்விரண்டிடங்களையும் நேசப் படைகள் கைப்பற்றியதன் பயனாக, சீனப் பெருவழியில் ஓரளவிற்கு பந்தோபஸ்து அதிகப்பட்டிருக்கிறது. பர்மா போராட்டம் முழுவதிலும், பிரிட்டிஷ், இந்திய, அமெரிக்கப் படைகள் தரையிலும், தண்ணீர் மேலும், ஆகாயத்திலும் மகா வீரத்தோடும் மன உறுதியோடும் போராடின. போர்த் தந்திர முறைகளை யொட்டி விமானப் பாதைகள் அமைத்தன; காடுகளில் போராடுவதற்கு இரகசியப் பாதைகள் அமைந்தன. இவை மகா ஆபத்தான பாதைகள். விமானங்கள் மூலம் படைகளும் சப்ளைகளும் கொண்டு போய் அங்கே சேர்க்கப்பட்டன. இயற்கையோடும் சதா போராடிக் கொண்டிருக்க வேண்டி யிருந்தது. அதாவது, காய்ச்சல், கடுமழை, மலைகள், சதுப்பு நிலங்கள், ஆறுகள், இதுவரை எவரும் போயிராத பகுதிகள், இவை யெல்லாம் இயற்கைத் தடைகளாயிருந்தன. இந்தக் கஷ்டங்களை யெல்லாம் சகித்துக் கொண்டு மகா வீரத்தோடு முன்னேறிப்போன படையினர் உண்மையிலே பெருமிதத்திற் குரியவர்கள் தான். அதிசயிக்கத் தக்க செயல்கள் புரிந்த 14-ம் படையினை மிஸ்டர் சர்ச்சில் கீழ்க்கண்டவாறு புகழ்ந்தது ஒரு வியப்பல்ல :—

"பிரிட்டிஷ் 14-வது படைக்கு இந்நாடு நன்றி செலுத்த வேண்டும். இந்த யுத்தத்தில் இந்தப் படை மகா கடுமையான பணிகளைச் செய்து முடித்திருக்கிறது. உள்நாட்டில் நடைபெறும் சம்பவங்கள் அதைவிடக் கொடுமையாகவும் தெளிவாகவும் இருந்த போதிலும், அவர்களை நாம் மறந்து விடலாகாது."

இந்தப் படையில் அநேகத் தென்னிந்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களில் அநேகர் பர்மா போர் முனையிலிருந்து நேரே ரஜாவில் சென்ற வாரம் இங்கே வந்து சேர்ந்தார்கள். சென்னையில் அவர்களுக்குச் சிறந்த முறையில் வரவேற்புக் கிடைத்தது. சிற்றுண்டி முதலியன வழங்கப்பட்ட பிறகு, அவர்கள் ஊர்களுக்கு அனுப்பப்பட்டனர். தாம் கண்ட வெற்றிகளைக் குறித்தும், வட பர்மாவில் உள்ள காடுகளில் எப்படிப் போராடுவது என்பது பற்றியும், சென்ற 3 மாத காலம் போராடியதில் எதிரிப் படைகளில் ஒரு பாதியை எப்படி அழிக்க முடிந்தது என்றும் தம் உறவினருக்கும் நண்பர்களுக்கும் சொல்லுவார்கள்.

சர்ச்சிலின் ரகசிய ஆயுதம்.

இத்தாலியிலுள்ள நேசப் படைகள் ப்ளாரென்ஸ் நகரத்தைக் கைப்பற்றிவிட்டன. பர்மா போர் முனையில் தம் வீரத்தையும் போர்த் திறமையையும் எப்படி மெய்ப்பித்துக் கொண்டார்களோ, அதேபோல இங்கேயும் மெய்ப்பித்தார்கள். சென்னை சாப்பர்கள் மிகச் சிறந்த முறையில் பணியாற்றி, பெரும் புகழடைந்தார்கள். இத்தாலியில் ஜெனரல் அலெக்ஸாந்தருக் குட்பட்ட இந்த அசாதாரணப் படை, மிஸ்டர் சர்ச்சில் கூறியதுபோல, பல நேச நாடுகளின் நெருங்கிய ஒற்றுமையின் அறிகுறியா யிருக்கிறது. அமெரிக்கப் படைகள் ஜப்பானியர்களோடு நடத்தும் போராட்டத்தில், பிரிட்டிஷ், அமெரிக்க, கிரேக்க, தென்னாப்பிரிக்க, பிரஞ்சு, போலந்து, கனடியன் படைகளோடு சேர்ந்து நமது இந்தியப் படைகளும் போராடுகின்றன. இந்த ஒற்றுமை வாயளவில்லல்ல; செயலளவில்தான். இதைத் தான் சென்ற வாரம் சென்னைக்கு விஜயம் செய்திருந்த சர் சுல்தான் அகமதும் குறிப்பிட்டார். இந்தியாவில் ஒற்றுமை ஏற்பட வேண்டு மென்று வேண்டிக்கொண்ட அவர், ஒத்து வாழுவதே இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் நோக்கமாயிருக்க வேண்டும் என்று கூறினார். மேலும் அவர் கூறியதாவது :—

" அற்ப விஷயங்களையும் தன்னலமான காரியங்களையும் மறந்து, பெருங் கொள்கைகளுக்காக மட்டும் போராடினால் தான், யுத்தங்களில் வெற்றி பெறுவது மட்டுமன்றி, உலக முழுதிலும் நன்மையும் அமைதியும் நாளடைவில் ஏற்பட முடியும். இந்த ஒற்றுமைக் கொள்கையைப் பிரதம மந்திரி மேற்கொண்டதனால் தான், சென்ற 5 ஆண்டுகளாகக் கடுங் கஷ்டங்களுக் குள்ளாகி யிருந்த நேச நாடுகள் இப்போது மிகச் சிறந்த வெற்றிகள் அடைந்து வருகின்றன.

போர் முனை நிகழ்ச்சி விளக்கம்

பர்மாவில் சமீபத்தில் கிடைத்த வெற்றிகள்

பர்மா நாட்டின் தற்போதைய அமைப்பு நமக்குத் தெரியக் காரணமில்லை; ஆகவே, எதிரிகள் எப்படிப்பட்ட யுத்த தந்திர முறையைக் கை யாளுகிறார்களென்றும் நாம் உணர்ந்து கொள்ளுவதற்கில்லை. இவ்விரண்டும் போராட்டத்தை மேற்கொண்டு நடத்துவதற்குத் தடையா யிருப்பன. இந்தத் தடைக ளெல்லாம் இப்போது நீங்கி, பிரிட்டிஷ், அமெரிக்கத் தரைப் படைகளும், விமானப் படைகளும் நாள்தோறும் அடித்தடுத்து வெற்றிகள் பெற்றிருக்கின்றன. அந்த வளமிக்க அழகிய நாட்டை நாசப்படுத்திச் சூறையாடிக் கொண்டிருந்த ஜப்பானியர்கள் அடிமாண்டு போகிறார்கள் என்பதைத் தான் குறிப்பிடுகிறது.

விமான பிரதம தளபதி மார்ஷல் பியர்சுக்கும் ஜெனரல் சர் ஜார்ஜ் கிப்பர்டுக்கும் நடைபெற்ற கடிதப் போக்கு வரவுகளைக் கொண்டு பார்த்தால் சென்ற மூன்று மாதங்களாக நடைபெற்ற போராட்டங்கள் எவ்வளவு மகத்தானவை என்று விளங்கும். காட்டு ராஜா என்று தம்மைத் தாமே கூறிக் கொண்டிருந்த ஜப்பானியர்களின் ஆணவத்தை ஒடுக்குவதில் நமக்கு எவ்வளவு உயர்ந்த திறமையுணடு என்பதற்கு, பிரசுரிக்கப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களே போதிய சான்றாகும். பர்மாவிலுள்ள ஜப்பானியப் படைகளில் பாதிக்கு மேல் செயலற்றுப் போயின. நமது முன்னணிப் படைகளால் கொல்லப்பட்டும் காயப்பட்டும் போனவர்களின் எண்ணிக்கை 5 ,840 பேர்கள். வெடி குண்டுகள் விழுவதனாலும், ஷெல் குண்டுகள் பாய்வதனாலும், காட்டில் உள்ளவர்களுக்கு உண்டாகும் நோய்களினாலும், உணவுக் குறைவினாலும் மடிந்தவர்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை. இம்பால் பகுதியில் நடைபெற்ற போராட்டத்தில் ஜப்பானியர்கள் முறியடிக்கப்பட்டதைப் போல வேறெங்கும் அவர்கள் அவ்வளவு கடுமையாகத் தோற்றதே கிடையாது என்று, விமான பிரதம தளபதி மார்ஷல் பியர்ஸ் கூறியது மிகவும் பொருத்தந் தான்.

தரைப்படையின் சார்பாக ஜெனரல் சர் ஜார்ஜ் கிப்பர்ட், விமான தளபதிக்கு விடுத்த கடிதத்தில் கீழ்க்கண்ட முக்கியமான வார்த்தைகள் காணப்படுகின்றன :—

"தரைப் படையின் திறமையினால் மட்டும் இந்த வெற்றி நமக்குக்

(6-ம் பக்கம் பார்க்க)

14-ம் படைக்குப் பெருமிதமான வரவேற்பு

ஊக்க மிக்க தோற்றமும் வீரமிக்க நெஞ்சமும்

சென்னை கவர்னர் வாழ்த்து

14-வது படையைச் சேர்ந்த தென்னிந்திய வீரர்களில் சுமார் 1,000 பேர்கள் பர்மாவிலிருந்து திரும்பி வந்தபோது அவர்களை வரவேற்கும் பேறு சென்னை நகரத்திற்கு மீண்டும் கிடைத்தது. இரண்டு ரயில் வண்டித் தொடர்கள் நிறைய அவர்கள் வந்து சேர்ந்த போது, சென்ட்ரல் ஸ்டேஷன் காட்சி கண் கொள்ளாக் காட்சியா யிருந்தது. அவர்கள் தம் மகிழ்ச்சிப் பெருக்கால் போட்ட பெருங் கூச்சலில், அவர்களை வரவேற்கும் பொருட்டு வானொலியாளர்கள் ஏற்பாடு செய்திருந்த சங்கீதம், மறைந்து விட்டது. படையினரை சப்-ஏரியா கமாண்டரான, பிரிகேடியர் மாக்ரிகர் வரவேற்றார். மீண்டும் தம் சொந்த நாடாகிய தென்னிந்தியாவுக்கு வந்து சேர்ந்தது பற்றி பெரு மகிழ்ச்சி கொண்டிருந்த அவர்கள், ப்ளாட் பார்மில் கூடி விட்டார்கள். ஏற்கெனவே அநேகம் பேர்கள் சென்னையிலும் அடுத்துள்ள ஊர்களிலும் போய்ச் சேர்ந்து விட்டார்கள். மீதி யுள்ளப் பாதிப் பேர்கள், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, திருவனந்தபுரம், கொச்சி, வட மலையாளம், பெங்களூர் முதலிய இடங்களிலிருந்து வந்தவர்கள்.

இவர்கள் புறப்பட்ட போது, முன்னதாக "சென்னை தன் வீரர்களை வரவேற்கிறது" எனனும் எழுத்துக்கள் பொறித்த பெருங் கொடிகள் ஏந்திச் செல்ல, தோரணங்கள் தொங்க, கொடிகள் காற்றில் வீசி வீசி வரவேற்றன. நெடுந் தூரம் ரயிலில் பிரயாணம் செய்து கொண்டு வந்தவர்கள் தம் கால்களை நன்ருக நீட்டவும் மடக்கவும் சமயங் கிடைத்தது பற்றி அவர்களிற் பெரும் பாலோர் பெரிதும் மகிழ்ச்சி கொண்டிருப்பார்கள். அவர்கள் பெரிதும் களைத் திருந்தார்கள். ஆகவே, தம் மூட்டை முடிச்சுக்களை எடுத்துக் கொண்டு, அடுத்தாற் போல் மூர் மாளிகையில் அமைக்கப்பட்டிருந்த ஓய்விடத்திற்குப் போனார்கள். இங்கே ஜில்லா வாரியாக அவர்கள் பிரிந்து கொண்டார்கள்.

ஹோப் சிமாட்டியார் உதவும் சிற்றுண்டி

பிறகு, பெரிதும் மகிழத் தக்க சம்பவம். தென்னிந்திய முறையில் செய்யப்பட்ட உணவை முதன் முதலாக அவர்களுக்குப் பரிமாற இந்திய உபசரணைக் கமிட்டியார் காத்துக் கொண்டிருந்தார்கள். வரவேற்புச் சிற்றுண்டியும் அதன் பிறகு நடை பெற்ற களியாட்டங்களும் சென்னை ஜவுளி வியாபாரிகள் சங்கத்தாரால் நடைபெற்றன. பல வரிசைகளாக மேசைகளை நீளமாகப் போட்டு நல்ல வகையான பொருட்கள் பல அவற்றின் மீது பரிமாறப் பட்டன. அவர்களோ பெரிதும் களைத்திருந்தனர். நெடுந்தூரப் பிரயாணத்தால் அவர்களுடைய உடைகள் பெரிதும் அழுக்கேறி யிருந்தன. மீண்டும் தம் சொந்த வீடுகளில் சாப்பிடுவது போல அவர்கள் விரைவில் திருப்தியாக உண்டார்கள். பர்மா காடுகளில் இப்படிப்பட்ட உணவை அவர்கள் சாப்பிட்டு நெடு நாட்களாயின.

(8-ம் பக்கம் பார்க்க)

தன் வீரர்களை சென்னை வரவேற்கிறது



சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கடுத்த மூர் மாளிகையில் 14-வது மகா படையைச் சேர்ந்த தென்னிந்திய வீரர்கள் சமீபத்தில் வரவேற்கப் பட்டனர். அவர்கள் அனைவரும் ரஜாவில் தம் சொந்த ஊர்களுக்குப் போகிறவர்கள். இவர்களுக்குச் சிற்றுண்டி வழங்கப்படுகிறது.



(4-ம் பக்கம் தொடர்ச்சி)

கிடைத்த தென்று நான் சொல்லமாட்டேன். தென்கிழக்காசியப் படைத் தலைவராதிக்கத்திற்குட் பட்ட தரைப் படையும் விமானப் படையும் சேர்ந்து தான் இந்த வெற்றி பெற்றன."

கூட்டுறவினால் கிடைத்த வெற்றி

இம்மொழிகள் மிகவும் முக்கியமானவை. உலகத்திலேயே மகா கொடிய மழை காலத்தில் பலவகைப் படைகளின் பரஸ்பர ஒத்துழைப்பாலுமே தான் விமான மூலம் சிண்டிட் படைகளுக்கு சப்ளைகள் அனுப்பப்பட்டன. தற்காலிக அரண்கள் அமைக்கப்பட்டன. பர்மாவின் உள் நாடுகளிலுங் கூட விமானப் பாதைகள் அமைந்தன. ஜப்பானியப் படைகள் சிதறடிக்கப்பட்டன. அவர்களுக்குப் போக்குக் காட்டி, காடுகளிலும் பள்ளத்தாக்குகளிலும் விரட்டியடித்தோம். சென்ற 3 மாதங்களாக கடும் மழையையும் பொருட்படுத்தாது, அவர்களை நாம் விரட்டியடித்ததன் பயனாக, தம் பாதுகாப்பிடங்கள் ஒவ்வொன்றாக விட்டுவிட்டு ஜப்பானியர் ஓடவேண்டியதாயிற்று. ஆகவே, வட பர்மாவில் ஜப்பானியர்கள் ஆபத்தின்றி வாழுவது முடியாத காரியமாகிற்று. நமது பல்வகைப் படைகளும் ஒத்துழைத்ததன் பயனாகத் தான், கடைசியாக மியிட்கியானா மீட்சி பெற்றது. இடைவிடாது தளர்ச்சி யடையாமல் நமது படைகள் மேலும் ஒத்துழைத்ததால், சீனாவிற்குப் போகும் பர்மா ரோட்டிலிருந்து ஜப்பானியர்களை விரட்டியடிக்க முடிந்தது. தலைசிறந்த ஒத்துழைப்பிருந்தால் மட்டுந் தான் போராட்டப் புது முறைகளைக் கண்டு பிடிக்கவும் வகுக்கவும் முடியும். இந்தப் பெரும் போராட்டத்தில் மற்றொரு முக்கியமான சம்பவம் நடைபெற்றது. பெருந் தடைகளாயுள்ள மலைகளை யெல்லாம் கடந்து பெருங் கஷ்டங்களுக்குள்ளாகி பிரிட்டிஷ் விமானப் படையைச் சேர்ந்த விமானங்கள் இண்டாகி ஏரிக்கரையில் போய் இறங்கின. பர்மாவின் உள் நாட்டிலுள்ள இந்த ஏரியைக் குறித்து பொதுவாக யாருக்கும் தெரியாது. இது மோகாங்கிற்கு 30 மைல் தெற்கே இருக்கிறது.

இது போன்றது தான் 6 டன் பீரங்கி (ஹாவிட்ஸியர்) யை விமான மூலம் அனுப்பியதும் கூட. இதை ஏற்றிச் சென்றது அமெரிக்க விமானம். அந்த விமானிகள் சீனர்கள். இவற்றிலெல்லாம் பலவகைப் படைகளும் ஒத்துழைத்ததன் பயனாகத் தான், இந்த கஷ்டமான சிக்கல் மிகுந்த போராட்டத்தில் நாம் வெற்றி பெற்றோம்.

இதைக் கொண்டு பர்மா போராட்டம் முடிவடைந்து விட்டதென்று கருத முடியாது. இங்கே ஜப்பானியர் படுதோல்வி யடைந்தார்கள் என்பது உண்மை தான். இந்த மகத்தான தோல்வி அவர்களுக்கு ஏற்பட்டதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அவர்களுக்கு வேண்டிய விமான பலம் அவர்களுக்கு அங்கில்லை; இரண்டாவதாக திறமை வாய்ந்த படைத் தலைவர்களும் அங்கில்லை. கைதியாகப் பிடிக்கப்பட்ட ஒரு ஜப்பானிய உத்தியோகஸ்தர் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இந்த யுத்தத்தில் நான் வெகுவாக மனமுடைந்து போய்விட்டேன். ஏனென்றால் சென்ற 10 நாட்களாக நான் என்ன செய்யவேண்டு மென்று மேலதிகாரிகளிடமிருந்து எனக்கு எவ்வித கட்டளையும் வரவில்லை. அங்கே கூட்டு முயற்சியின் தோற்றமே கிடையாது. எதிரியை நொறுங்கடிக்கும் கூட்டுணர்ச்சி உத்வேகம் ஒரு திவலையும் அங்கே கிடையாது."

இருந்தாலும் எதிரி பலம் பர்மாவில் பலமாகத் தானிருக்கலாம். கிழக்காசியா முழுதிலும் பலமாகத் தானிருக்கிறது. ஆகவே, நேசப் படைகள் மீண்டும் திரண்டு கடும் போருக்கு ஆயத்தமாக வேண்டு மென்று இதினின்று விளங்குகிறது. நமது வீரரஷ்யத் தோழர்களைப் போல, முன்னேறிப் போவதில் நாம் கொஞ்சமும் தளராது முன்னேறுவோமாக.

ஜெர்மன் படையின் முதுகெலும்பு ஒடிகிறது

விசித்திரமாகப் பேசுவதில் வல்லவர் மிஸ்டர் சர்ச்சில். ரஷ்யர்கள் ஜெர்மன் படைகளின் முதுகெலும்பை ஒடிக்கிறார்கள் என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தந் தான். சோவியத் படைகளின் தலை சிறந்த வெற்றிகளின் பலனாக, போலந்தின் பெரும் பகுதி மீட்சி பெற்றுவிட்டது. இனி சோவியத் அரசாங்கமும் போலந்து அரசாங்கமும் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். இது மிகச் சிக்கலானதோர் பிரச்சினை. இந்த வேலையில் மார்ஷல் ஸ்டேலினும் அவருடைய ஆலோசகர்களும் தம் திறமையைக் காட்டவேண்டும். தமக்கு நாடு பிடிக்கும் ஆசை கிடையாதென்றும், நாஜிகள் வயப்பட்ட நாடுகளை அவர்களிடமிருந்து மீட்பதுதான் தன் லட்சியம் என்று கொண்டிருப்பதாக ஸ்டேலின் குறிப்பிட்டார். அப்படிப்பட்ட பெருமிதங் கொண்டவர் இந்தக் காரியத்தைத் திறமையுடன் செய்து முடிப்பாரென்று எதிர்பார்க்கலாம்.

துருக்கியின் வீரத் தீர்ப்பு

துருக்கி நேசநாடுகளுடன் சேர்ந்து விடுவதென முடிவு செய்துவிட்டது. இது கேட்ட வான் பேப்பன் (ஜெர்மன் ஸ்தானீகர்) ஒருக்கால் சுவித்சலர்ாந்திற்குப் போய் இருக்கக் கூடும். ஏனென்றால் மற்ற ஜெர்மன் படைத் தலைவர்கள் மீது சீறி வரும் ஹிட்லர் வான் பேப்பனை அரவணைப்பாரா? அவருடைய சீற்றத்தைத் தாங்கும் ஆற்றல் வான் பேப்பனுக்கு ஏது? ஹிட்லருக்கு இரண்டு வகைகளில் பேருதவியாயிருந்தது துருக்கி. ஜெர்மனிக்கு முதலாவதாக ஜெர்மன் எல்லைப்புறத்திற்கு துருக்கி காவலா யிருந்தது. இரண்டாவதாக, ஜெர்மன் யுத்தத் தேவைகளுக்கு ஏராளமான க்ரோம் துருக்கி உதவிக் கொண்டிருந்தது. இந்த இரண்டு வசதிகளையும் ஹிட்லர் இழந்தால், அவருக்குக் கோபம் வரத்தானே செய்யும். இது வரை துருக்கியில் ஸ்தானீகராயிருந்த வான் பேப்பன் அவருடைய கோபத்திற்கு இப்போது அஞ்சுவது இயற்கை தானே.

பிரான்சில் நேசப்படைகளின் திடீர் தாக்குதல்கள்

இந்த வாரத்திய முக்கிய நிகழ்ச்சிகளாவன :— நார்மண்டியின் வட போர்முனையில் எதிரிப் படைகளைத் தாண்டிக் கொண்டு அமெரிக்கப் படை முன்னேறியது. அவ்ராஞ்சிஸை நோக்கித் திடீரென்று முன்னேறித் தாக்கியது. பிரிட்டனி தீபகற்பத்திற்கு குறுக்கே பாய்ந்தது கிழக்கே பாரீசை நோக்கி அணுகிக் கொண்டிருப்பது. திறமை வாய்ந்த ஜெர்மன் படையான கிராக் எஸ். எஸ். டிவிஷன்கள் முன்னேற ஒட்டாமற் தடுத்தது மட்டுமன்றி, படிப்படியாகப் பின்னடையச் செய்யும்படி செய்ய பிரிட்டிஷ் படைகள் பலம் பெற்றிருக்கின்றன வென்னும் மன உறுதி. ஜெர்மன் படையினரின் மனோ பலத்தைச் சிதைக்கத் தக்கபடி அமெரிக்கர்கள் கையாண்ட போர் முறை. நார்மண்டி போர் முனையில் நடைபெறும் போராட்டத்தின் போக்கைப் பார்த்தால் மகா கடுமையானதாயிருக்கிறது. பொறுக்கி எடுக்கப்பட்ட ஜெர்மன் படையினர் தான் ஜெர்மானியப் படைகளில் போராடுகிறார்கள் என்று கொள்ள வேண்டியிருக்கிறது. இவர்கள் ஹிட்லரின் அரசியல் கொள்கையை விடாப்பிடியாகக் கொண்டவர்கள். இந்த மகா கடுமையான பயங்கரமான போராட்டத்தில், சிறுகச் சிறுக எதிரியைப் பின் வாங்கி யோடும்படி செய்யும் ஆற்றல் தனக்குண்டு என்று பிரிட்டிஷ் படைகள் மெய்ப்பித்துவிட்டன. ஒரு இம்மியளவு கூட நேசப் படைகள் முன்னேற ஒட்டாதபடி தடுத்துவிட வேண்டு மென்பது தான் ஜெர்மானியரின் பாதுகாப்புத் திட்டமென்பது தெளிவாயிற்று. ஆகவே நேசப் படைகள் வெகுவாக முன்னேறக் கூடவில்லை யென்னும் காரணம்பற்றி, அலட்சியமாக நினைத்துவிடக் கூடாது. மகா பலமான எதிரிப் பாதுகாப்புக்களை வென்று கொண்டு தான் முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, இது மகா முக்கியமானதோர் போர்முனையாகும்.

ஆர்னோ போராட்டம்

இத்தாலியில் கடும் போர் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது. அங்குள்ளது தான் ப்ளாரென்ஸ் என்னும் அழகிய நகரம். இதிலும் இதைச் சுற்றிலும் உள்ள கருவூலங்கள் வெளிப்படுவதற்கு இந்நகரத்தின் மா பெரும் மீட்சி பெரிதும் உதவுகிறது. இத்தாலியின் பண்டைக் கலைகளின் உறைவிடமாக அது விளங்கியது.

பிளாரென்ஸை நேசப் படைகள் கைப்பற்றிக் கொண்டால், அப்பினைன் மலைகளில் தான் நாஜிப் படைகள் புகலிடங் கொள்ளவேண்டும். அப்போது நேச விமானப் படைகள் திடீரென்று தாக்கி அவற்றிற்கு நாசம் விளைவிக்கக் கூடும். அன்றியும் தம் கனமான தளவாடங்களை அங்கங்கேயே விட்டுவிட்டு ஓடும்படி ாக நேரும். ஐரோப்பியப் போராட்டத்திலேயே, ப்ளாரென்ஸ் போராட்டம் மகா முக்கியமானது.

ஆசைப் பட்டது ஊசிப் போச்சு!

சட்டென்று ஒரு சொட்டுக் கண்ணீரை உதிர்க்க உங்களால் முடியுமானால், உதிர்த்து வையுங்கள். ஏமாந்த சோணகிரிகளான ஜப்பானியருக்காகவே இந்தக் கண்ணீரை உதிர்க்கச் சொல்லுகிறோம்.

நானென்ன மட்டமா?

பாவம்! ஏதேதோ பிரமாதமாக எண்ணிக் கொண்டு, சக்திக்கு மிஞ்சி அகலக்கால் வைத்து விட்டார்கள் அவர்கள். இப்போது திணறுகிறார்கள். எங்கு சென்றாலும் இடியும் உதையுமாகவே இருக்கிறது அவர்களுக்கு. 'ஜெர்மானியருக்கு நாங்கள் சளைத்தவர்களல்ல, அவர்கள் ஐரோப்பாவில் ஏக சக்ராதிபத்யத்தைச் செலுத்த எண்ணி யிருக்கிறார்களென்றால், நாங்கள் கீழ்த் திசையில் அகண்ட ஆசியாவிற்குத் தலைமை வகிக்கப் போகிறோம். ஜெர்மானியர் மளமளவெனத் தரை மார்க்கமாக, நெடுந்தூரம் முன்னேறி பல நாடுகளைக் கைப்பற்றினார்களா? நாங்கள் அதி சாகசத்துடன் தொலை தூரங்களில் உள்ள தீவுகளையும், நாடுகளையும் கைப்பற்றினோம். ஜெர்மானியரைக் கண்டு உலகம் பிரமிக்கிறது: எங்களைக் கண்டும் தான் உலகம் திகைக்கிறது. ஜெர்மனியைவிட நாங்கள் சில விஷயங்களில் ஒஸ்தி என்று கூடச் சொல்ல வேண்டும். ரப்பர், அலுமினியம், பெட்ரோல், ஈயம் ஆகிய பொருள்களில், உலகத்தில் உள்ள ஸ்டாக்குகளிலே முக்கால் வாசிக்கு மேல் எங்கள் கைகளில் சிக்கியிருக்கிறது. வெறும் மூங்கில்களைக் கொண்டே விமானம் செய்து விடுகிறோம் நாங்கள். ஒரு ஆளை வைத்துக் கொண்டே ஓடும் நீர் மூழ்கிகளிலிருக்கின்றன எங்களிடம்! எங்களை ஒரு பயலும் ஒன்றும் செய்ய முடியாது' என்று எண்ணி இறுமாந்திருந்தார்கள் ஜப்பானியர்.

மண்டை கனத்தது

1941-ம் ௵ டிஸம்பர் ௴ ஆரம்பத்தில் அவர்கள் அக்ரமமாகப் போரில் இறங்கினார்கள். அப்பொழுதி லிருந்து கிட்டத் தட்ட இரண்டே முக்கால் வருஷங்களாகின்றன. இந்த இரண்டேமுக்கால் வருஷங்களில், பாதிக்கு மேற்பட்ட காலத்திலே ஜப்பானியரது மண்டை கனத்துப் போகும்படியான சம்பவங்கள் பல நடந்துவிட்டன என்பது உண்மை.

அந்தக் காலத்திலே அமெரிக்கா யுத்தத்திற்கு சித்தமாகவே இல்லை. ஏதோ, பிரிட்டனுக்கும் அதைச் சேர்ந்த நேச நாடுகளுக்கும் அமெரிக்கா பலவித உதவிகளை ஒரு வியாபாரி ஹோதாவில் செய்து கொண்டிருந்ததே ஒழிய, தானே போர்க் கோலம் போட அது சித்தமாகவே இல்லை. அதோடு, அந்தச் சமயத்திலே, பிரிட்டனுக்கும் போதிய வசதிகளில்லை. ஜெர்மானியரின் அட்டகாசத்தைச் சமாளித்துக் கொண்டு, தங்களது நிலைமை மோசமாகாமல் பார்த்துக் கொண்டு, பொறுமையோடு தக்க சமயத்தை எதிர் பார்த்து, ஜெர்மனியை உதைக்க ஆளையும், ஆயுதங்களையும் சேர்த்துக் கொண்டிருந்தது பிரிட்டன். ஆகவே ஜப்பானை ஒடுக்க பிரிட்டனால் சட்டென்று எதும் செய்ய முடியாது போய் விட்டது.

தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால்?

"தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்ரசண்டன்" என்கிற பழமொழிக் கேற்ப, ஜப்பான் கொளுத்தித் தள்ளிக் கொண்டே வெகு தூரம் போய் விட்டது. கொழுத்த இடங்கள் எல்லாம், அதிக சிரமமின்றி தன்னுடைய கைகளில் விழவே, ஜப்பானுக்கு மெய் மறந்து போய் விட்டது. ஆஹா! எல்லாம் நாம் நினைப்பது போலவே நடந்து வருகிறதே! உண்மையில் கிழக்குத் திசைக்கு நாமே அதிபதியாகப் போகிறோம் என்று ஜப்பானியர் மனப்பால் குடிக்கலாயினர்.

எண்ணிய எண்ணம்

இந்தியா மீது ஜப்பானியருக்கு என்றுமே கண் தான். இந்தியாவைப் பிடித்துக் கொண்டால், ஜப்பானிய வியாபாரத்திற்குப் பிரம்மாண்டமான 'மார்க்கெட்' கிடைத்தது போலல்லவா? ஆனால், இந்தியாவை விழுங்க நினைப்பது அசட்டுத்தனம் என்பது அப்பொழுது ஜப்பானுக்குத் தோன்றியிராது. இந்தியா பாதுகாப்பற்ற நாடு; திறந்த வீட்டிலே ஏதோ புகுந்தது போல், கிர்ரென்று போய்விடலாம் என்று அவர்கள் எண்ணி யிருக்கக் கூடும்.

ஆச்சரியந் தான்!

ஜப்பானுக்கு தெற்கே பல ஆயிர மைல் தூரத்தில் உள்ள பிரதேசங்கள் பல ஜப்பானியர் வசம் சிக்கிய போதும், ஆஸ்திரேலியா மீது ஜப்பானிய விமானங்கள் பறந்து சென்று குண்டுகளை வீசிய போதும், உலகோர் கொஞ்சம் பயந்தே இருப்பார்கள் என்பது நிச்சயம். ஒரு சிறு நாக்குப் பூச்சி போன்றுள்ள ஜப்பான் இந்தப் போடு போடுகிறது என்று எல்லோரும் முழித்திருப்பார்கள். இந்தத் திகைப்பு, நேச நாட்டினரின் ஆத்திரத்தை மூட்டிவிட்டது. முக்கியமாக அமெரிக்காவிற்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. ஏனென்றால், ஜப்பான் போர்க் கோலம் பூண்டதுமே, அயோக்யத்தனமாக பெர்ல் துறைமுகத்தைத் தாக்கி படுசேதத்தை விளைவித்தது. அப்பால் அமெரிக்காவிற்குச் சொந்தமான தீவுகள் பலவற்றை ஜப்பானியர் கைப்பற்றினர், பிலிப்பைன் தீவுகள் அமெரிக்க ஆதிக்கத்திலிருந்தன. அவற்றையும் ஜப்பானியர் பிடுங்கிக் கொண்டார்கள். அமெரிக்காவின் மேல் கரையை நோக்கி, ஓரிடத்தில் ஜப்பானிய கப்பல் பீரங்கிகள் சுட்டன. இந்தச் சம்பவங்கள் எல்லாம், பிரமாண்டமான ஆள் பலமும், ஆயுதங்களைச் சிருஷ்டிக்கும் பலமும் கொண்ட அமெரிக்காவிற்கு அவமானத்தையும் ஆத்திரத்தையும் மூட்டி விட்டன.

சீறினர்

அவ்வளவு தான்! அமெரிக்கா சிங்கம் போல் சீறி எழுந்தது. அச்சு நாடுகளின் கொட்டத்தை அடக்கி விட்டே மறு வேலை என்று தீர்மானித்தது. மளமளவென எல்லாத் தொழிற்சாலைகளையும், தொழிலாளர்களையும் பெரிய யுத்தத்திற்கு வேண்டிய சாதனங்களைத் தயாரிக்கும் வேலைகளில் ஈடுபடுத்திற்று. ஏராளமான ஆட்களைப் பட்டாளங்களில் சேர்த்துக் கொண்டது. முரட்டு விமானங்களையும், கப்பல்களையும் கட்டத் தொடங்கிற்று.

அங்கே கை உயர்ந்தது!

மெள்ள மெள்ள அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் வாலாட்டிக் கொண்டிருந்த ஜெர்மன் நீர் மூழ்கிகளின் வாலை அமெரிக்கர் அறுத்தனர். அப்பால், மேற்கு ஆப்பிரிக்காவில் ஒரு பெரிய படை போய் இறங்கி, வட ஆபிரிக்காவிலிருந்து நாஸிப் படைகளை அடித்து விரட்டி, இத்தாலிக்குள் யுத்தத்தைக் கொண்டு செல்ல உதவிற்று. பிரிட்டனிலே, இரண்டாவது போர் முனைக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தன. அமெரிக்கப் படைகளும், சாமான்களும் பிரிட்டனிலே வந்து குவிந்த வண்ண மிருந்தன. அமெரிக்க விமானங்கள் மகா சக்தி வாய்ந்தவை. பிரிட்டிஷ் விமானங்களோடு சேர்ந்து ஜெர்மனியின் உயிர் நாடிகளைத் தகர்க்க அமெரிக்க வெடி வீச்சு விமானங்கள் வெகுவாக உதவின. அப்பால், அமெரிக்க விமானங்களில் சில, நேரே ருஷ்யாவில் போய் இறங்கின.

இரண்டாவது போர் முனை ஆரம்பமாயிற்று. இதிலே, அமெரிக்கப் படைகளுக்கு நிறையச் சேதம் ஏற்பட்டது. இதிலிருந்தே, வந்திறங்கிய அமெரிக்கப் படைகளும் நிறைய இருக்க வேண்டுமென்று யூகித்துக் கொள்ள முடியாதா? இப்பொழுது அமெரிக்க வீரர்கள் பிரான்ஸிலே வெற்றி மாலைகள் சூடிக்கொண்டேயிருக்கிறார்கள் தினமும். நாஸிகள் சென்ற வாரம் ஒரு நாள் பிரமாண்டமான எதிர் தாக்குதலை ஆரம்பித்து, மூன்று நான்கு மைல் முன்னேறவும் செய்தார்கள். ஆனால் அமெரிக்கரும், மற்றப் படைகளும் அந்தத் தாக்குதலை உருப்படாமல் அடித்து விட்டனர்.

முயற்சியின் வெற்றி

இப்படித் தங்களது ஒரு கையை அட்லாண்டிக் பிரதேசத்திலே உயரச் செய்து கொண்டிருந்தபொழுதே, இன்னொரு கையை மெதுவாக பஸிபிக் பிரதேசங்களில் உயரச் செய்ய அமெரிக்கர் முயன்று வந்தனர். அவர்களது முயற்சிகள் பலனளித்தன.

ஜெனரல் மாக் ஆர்தரின் தலைமையின் கீழ் பல அரிய காரியங்களை அமெரிக்கர் சாதித்து வருகின்றனர். எங்குமே அவர்களுக்கு வெற்றி தான். இரண்டு வருடங்களுக்கு முன், திடீர் என ஜப்பானியர் எப்படி தூர தூரத்தில் உள்ள தீவுகளில்

போய் இறங்கினார்களோ, அதே போல இன்று அமெரிக்கர் போய் ஜப்பானியர் பிடித்துக் கொண்டுள்ள தீவுகளில் திடீர் திடீர் என்றிறங்கி, 'கப் கப்' என்று பிடித்துக் கொள்கிறார்கள்.

இந்தியாவைக் கௌவினர்

இந்த நிலைமையில், ஜப்பானியத் தலைவர்களுக்கு பெரிய யோசனையாகப் போய் விட்டது. ஜப்பானிய மக்கள் தங்களை கேலி செய்யப் போகிறார்களே என்ற பயத்தில், அவர்கள் இந்தியா மீது தங்கள் படைகளை ஏவி, பெரிய வெற்றிகள் சிலவற்றையாவது சம்பாதித்து, அதைப் பிரமாதப் படுத்திப் பேசிக் கொண்டிருக்கலாம் என்று எண்ணினார்கள் போலிருக்கிறது. உடனே, இந்திய சரித்திரத்திலேயே எக்காலத்திலும் நடந்திராத சம்பவமாக, ஜப்பானியப் படைகள் வட கிழக்கு இந்தியாவிற்குள் புகுந்துவிட்டன. மணிபுரி, கொஹிமா, மற்றும் அஸ்ஸாம் ரயில் பாதை, இவற்றிற் கெல்லாம் ஆபத்துக்களை உண்டாக்கி விட்டனர் ஜப்பானியர்.

எதிர் பார்த்தது போலவே, இந்த வெற்றிகளை ஜப்பான் ரேடியோ பன்னிப் பன்னிக் கூறிக் கொண்டிருந்தது. ஆனால், இந்த வெற்றி காலையில் மலர்ந்து மாலையில் வாடும் சில புஷ்பங்களைப் போலவே ஆயிற்று.

அற்ப வாழ்வு

இந்தியாவிற்குள் ஜப்பானியர் நின்று வாழ்ந்த வாழ்வெல்லாம் ஒரு சில மாதங்கள் தான். அவர்கள் பிடித்த பிரதேசங்களை யெல்லாம், இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ் வீரர்கள் திரும்பக் கைப்பற்றி விட்டார்கள். அதுமட்டு மில்லை, இந்தியா பர்மா எல்லையைக் கடந்து, டாமு என்ற நகரைக் கூடப் பிடித்து விட்டார்கள். டிடிம் என்ற பிரதேசத்திலே தான் ஜப்பானியர் கொஞ்சம் இழுத்துப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பர்மாவில் உதை

இதே சமயத்தில், ஜப்பானியரது படைகளுக்குச் சில நூறு மைல்களுக்குப் பின்னால், போய்க் குதித்து வடக்கேயிருந்து பர்மாவிற்குள் ஒரு நேசப் படை புகத் தொடங்கி விட்டது. அது செய்த காரியங்களை நினைத்தால், எந்தக் காலத்திலும் அதைப் புகழ்ந்து கொண்டேதானிருப்போம். அமெரிக்கரிடம் பழகிய சீனப் படைகள் பலவும் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. அந்தப் படைகள் எல்லாம் சேர்ந்து பெற்ற பெரிய வெற்றிகளில் சமீப காலத்து, மிட்டிகினா நகரத்தைக் கைப்பற்றியது தான். இனி, வெகு சீக்கிரமே பர்மா ரஸ்தா பிடிபடலாம். ரங்கூனை தரை மார்க்கமாகப் போய்ப் பிடிக்க முடியாது என்று முன்பு அபிப்பிராயந் தந்துகொண்டிருந்தவர்கள், இப்பொழுது தங்கள் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளலாமா என்று கூட நினைக்கக் கூடும்.

ஊசிப் போச்சு!

இதற்கிடையில், அமெரிக்க விமானங்கள் அசல் ஜப்பானிய நகரங்கள் மீதே குண்டு மழை பொழிந்து விட்டு, திரும்பி விட்டன. ஜப்பானியக் கப்பற் படையும் பயந் தொதுங்கிக் கிடக்கிறது. ஜப்பானின் விமான பலத்தைக் குறித்துப் பிரமாதமாக எதுவும் பேசுவதற்கில்லை. இப்பொழுது, ஆள் பலமோ சிதறிக் கிடக்கிறது. இந்த நிலைமையில் வேறு விதியின்றி, பூரண ஆள் திரட்டல் முறையை ஜெர்மனியைப் போலவே ஜப்பானும் கைப்பற்றத் தொடங்கியிருக்கிறது. வாழ்விலே மட்டுமின்றி, தாழ்விலும் ஜப்பான், ஜெர்மனிக்கு மட்டமாகி விடவில்லை. அச்சு நாடுகள் இரண்டை அப்படி தாரதம்மியத் தோடு நடத்துவார்களா நேசதேசத்தார். இப்பொழுது நடக்கும் காரியங்கள் எல்லாம் ஜப்பானியரின் ஆசையை ஊசிப் போகவே செய்து வருகின்றன. அதிக ஆசை அதிக நஷ்டந்தானே ஐயா?

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

இவர்களுக்கு உதவும் திருப்பணியில் பெரிதும் பங்கு கொண்டு உழைத்தவர்களில் குறிப்பிடத் தக்கவர்களில் மேன்மை தங்கிய ஹோப் சீமாட்டியாரும் அவருடைய உபசரணைத் தொண்டர்களுந்தான். இவர்கள் அந்தப் படையினரின் பசியைப் போக்க வேண்டி, பல முறை மிட்டாய்களும் பல வகைப் பானகங்களும் உதவினார்கள்.

ஜவுளி வியாபார சங்கத் தலைவர் மிஸ்டர் நாராயண் தாஸ் ஜே. தூதியாவுடனும் மற்றும் பலருடனும் நான் பேசிக் கொண்டிருந்தேன். அப் படையினரில் பெரும்பான்மையோர் பல வகைக் கஷ்டங்களுக்கு உள்ளானவர்களாயிருந்த போதிலும், விடுமுறை பெற்று தாம் தம் சொந்த ஊர்களுக்குத் திரும்புவது பற்றி பெரிதும் மகிழ்வு கொண்டிருந்தார்கள். அவர்களுள் ஒருவர், கருத்து அடர்ந்த தாடியோடிருந்தார். ஒரு சீக்கியரென்றே அவரை நான் மதித்தேன். உண்மையில் அவர் சீக்கியரல்ல. ஆனால் பர்மா காடுகளில் போராடிக் கொண்டிருக்கும் போது, க்ஷவரம் செய்து கொண்டால் தன் வசமுள்ள தண்ணீர் செலவாகி விடுமே என்றஞ்சி க்ஷவரமே செய்யாமல் தாடி வளர்த்துக் கொண்டிருந்ததாக அவரே சொன்னார். அங்கிருந்தவர்களில் பெரும் பாலோர் 30 வயதிற் குட்பட்டவர்கள். ஒருவர் மட்டும் தன் வயது 17 என்று சொன்னார். இவர் பர்மாவில் 2 வருஷம் கடும் போராடித் திரும்பி யிருக்கிறார்.

கவர்னர் வாழ்த்து

பர்மாவிலுள்ள காடுகளின் ஒற்றையடிப் பாதைகள் வழியாக இவர்கள் அரும் பாடுபட்டு புகழ் வாய்ந்த மணிப்பூரோடு வந்து அங்கிருந்து இங்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அனைவர் முகங்களிலும் வீரத் தோற்றம் ஒளி வீசியது. காட்டுப் போராட்டங்களில் கை தேர்ந்தவர்களிடம் இத் தோற்றத்தைக் காணலாம். போர் உடைகள் தான் அவர்கள் அணிந்திருந்தார்கள். அவர்களில் அநேகர் வசம் பயங்கரமான கத்திகளும் ஈட்டிகளும் இருந்தன. இதற்கிடையே தமிழிசை அவர்கள் உள்ளங்களைக் களிப்பித்தது. தென்னிந்தியப் பெண்மணிகள் அவர்களுக்கு உணவும் சிகிரெட்டுகளும் வழங்கினார்கள். தமிழ் நாட்டினரின் வரவேற்பு அவர்களுடைய முகங்களை மலரச் செய்தது.

சென்னை கவர்னர் மேன்மை தங்கிய சர் ஆர்தர் ஹோப் அங்கே விஜயம் செய்தார். அப்போது கரகோஷம் வானைப் பிளந்தது. அங்கே அவர் செய்த தோர் பிரசங்கத்தில் கீழ் கண்டவாறு குறிப்பிட்டார்:—

"உண்மையிலேயே பெரு மகிழ்வோடு உங்களை வரவேற்கிறேன். உங்கள் அருஞ் சேவைகளைப் பாராட்டுகிறேன். அவை பற்றி உங்களைக் கௌரவிக்கிறேன். உங்களுடைய அருந் தொண்டு பற்றி எல்லா வகைகளிலும் நாங்கள் கேள்விப் பட்டிருக்கிறோம். இவை பற்றி உங்கள் குடும்பத்தினரும் பெருமிதங் கொண்டிருப்பதைக் காண்பீர்களென்று நம்புகிறேன். உங்கள் கிராமங்களிலுள்ள மற்றவர்களையும் பல வகைப் படைகளிலும் சேரும்படி தூண்ட வேண்டும். உலகம் இனிது வாழும் பொருட்டு அவர்கள் வெளி நாடுகளில் போராடிக் கொண்டிருக்கும் பொழுது, அவர்களுடைய மனைவி மக்களும் குடும்பத்தாரும் நன்கு பராமரிக்கப் படுவார்களென்று சொல்லவும். உங்களுக்கு நல் வாழ்வு கூறுகிறேன்."

பிறகு இசையும் களியாட்டங்களும் நடை பெற்றன.

வானொலி நாட் குறிப்புகள்.

12—8—44	திருச்சி	மாலை 7-15—	"வெற்றிக்கு மூதுரை"—ராவ் சாஹிப் என். வெங்கடராமன்.
15—8—44	சென்னை	ஷை 7-00—	"நடை முதல் பேச்சு"—மிஸ்டர் என். கிருஷ்ண மூர்த்தி.
ஷை	திருச்சி	ஷை 7-15—	"நாமும் யுத்தமும்."
16—8—44	ஷை	ஷை ஷை	"ஜப்பான்—புதிய சர்வதேசப் போக்கு"—மிஸ்டர் ஜோஸப் சின்னப்பா.
19—8—44	ஷை	ஷை ஷை	"மத்திய ஐரோப்பாவில் அச்சுநாட்டுக் கூட்டாளிகள்"—ப்ரொபஸர் எம். ஆரோக்கியசாமி.

அங்கும் இங்கும்

பிரான்ஸில் பெரும் பகுதி ஜெர்மானியரிடம் தானிருக்கிறது. ஆனால், அதன் அளவு நாளுக்கு நாள் கரைந்துகொண்டே வருகிறது. கரைந்து போகும் பாகமெல்லாம், யுத்த அவஸ்தைகளிலிருந்து மீளும் பாகங்களாகின்றன. நாஸிப் பேயின் பிடியிலிருந்து விடுவிக்கப் பெறும் அந்தப் பிரதேசங்கள் எல்லாம், அசல் பிரஞ்சு சர்க்காருக்குக் கிடைக்கும் வரும்படியாகும்.

இந்த யுத்தத்திற்கு முன், பிரான்ஸின் தலை நகரம் **பாரிஸாக** இருந்தது. அந்த அற்புத நகரம் பாழாகிவிடப் போகிறதே என்ற கவலை உலகோர் அனைவருக்கும் இருந்தது. ஆகவே, சுதந்திர ப்ரியர்களான பிரஞ்சுக்காரர்கள் அதைப் பாதுகாப்பற்ற நகரமாக்கி, அதன் வாழ்விற்குப் பங்கம் ஏற்படாது பார்த்துக் கொண்டார்கள்.

பிறகு, ஜெர்மானியர் பிடியில் சிக்கிய போலி பிரஞ்சு சர்க்கார் தங்களுக்கு விஷியைத் தலை நகரமாக்கிக் கொண்டனர். இப்பொழுது அந்த விஷி நகருக்கே ஆபத்து வந்து விடும் போலிருக்கிறது. ஆகவே, விஷியில் உள்ள வேஷதாரி சர்க்கார் வெளி யிடத்திற்குக் கிளம்பி விட்டது. கூடிய சீக்கிரமே இந்த சர்க்காரும் சரி, நாஸிகளும் சரி, பிரஞ்சு எல்லையையே தாண்டிப்போக வேண்டி நேரிடலாம்.

கோட்டை விடுகிறார்கள்

முக்யமான பிரதேசங்களில் எல்லாம், நாஸிகள் கோட்டை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்கப் படை போடுகிற போடு பெரும் போடாக இருக்கிறது. நேசப் படைகள் முக்யமான பிரஞ்சுத் துறைமுகங்கள் சிலவற்றைக் கைப்பற்றி விட்டன. இன்னும் சில அவர்களின் கைகளுக்கு வந்துவிடும் நிலைமையி லிருக்கின்றன. அவற்றை விடாது பற்றிக் கொண்டிருக்கும் சமர்த்து ஜெர்மானியருக்கு இல்லை.

அது வேறு காலம்!

வானத்திலும் சரி, கடலிலும் சரி, நிலத்திலும் சரி அவர்கள் தலைவிரித்தாடிய காலமெல்லாம் மலை ஏறிப் போய் விட்டது. இப்பொழுது ஆடும் 'சான்ஸ்' நம்மவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. மறுபடியும் நாஸிகளுக்கு எந்த சான்ஸும் கிடைக்கப் போவதில்லை.

'சான்ஸ்' இருக்கிறதா?

"தலை தூக்க முடியாது ஒழிந்து போவதற்குக் கூடவா 'சான்ஸ்' இராது"? என்று கேட்பீர்கள். தானாக ஒழிந்து போனால் தான் தேவலையே! நாஸிஸம் லேசில் ஒழியாது. அட்டை போல அது ஜெர்மனியையும், ஜெர்மன் மக்களையும் பற்றிக் கொண்டிருக்கிறது. அதை அகற்று முன், ஜெர்மனிக்கும் ஜெர்மன் மக்களுக்கும் ஏகச் சேதம் உண்டாகத் தான் செய்யும். திரும்பவும், ஜெர்மனியிலே ஏதாவது புதுத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டு மென்றால், 'அடியைப் பிடிடா பாரத பட்டா' என்ற கதையாகவே, அடியிலிருந்து, ஆனா, ஆவன்னாவிலிருந்து எல்லாவற்றையும் தொடங்க வேண்டியிருக்கும். பட்டப் பகலிலும், பகல் பொழுது கழிந்த பின்னும், ஆயிரக் கணக்கிலே அமெரிக்க, நேச தேச விமானங்கள் ஜெர்மனியைத் தாக்கி வருவது வெகு சகஜமான விஷயமாகி விட்டது. இத்தனை விமானங்களிலிருந்து விழும் குண்டுகள், சும்மா வெடித்துவிட்டு, சேதமெதையும் உண்டாக்காம லிருந்து விடுமா என்ன?

ஏமாந்தார்கள்

நேசப் படைகள் பாரிஸ் நகரத்திற்கு 100 மைல் தூரத்தி லிருக்கின்றன. அந்த இடத்திலே நாஸிகள் பலமான பாதுகாப்புகளைச் செய்திருந்தார்கள். இந்தப் பாதுகாப்புகளை நேசப் படைகள் துளைத்து விட்டன. அடுத்தபடியாக, பாரிஸிற்கு 35 மைல் தூரத்திலேதான், நின்று போராட நாஸிகளுக்கு வசதிகளிருக்கின்றனவாம். இப்படி நேசப் படைகள் ஒரேயடியாக வந்து மேல் கரையிலிறங்கும் என்று நாஸிகள் தங்கள் கனவிலும் நினைக்கவில்லை என்பது, இப்பொழுது நடக்கும் காரியங்களிலும், அவர்கள் செய்துள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளிலிருந்தும் நன்றாகத் தெரிகிறது.

நொண்டியின் கெடுபிடி

சென்ற வாரத்திலே, நாஸிகளின் கப்பல்களை நேச தேச விமானங்களும், நீர் மூழ்கிகளும் அழித் தொழித்திருக்கின்றன. ஏற்கெனவே சீர்குலைந்து கிடக்கும் கப்பற் படை இந்தச் சேதங்களால் இன்னும் பலங் குறையப் பெற்றிருக்கும். தினசரி நாலு கப்பல்கள் பலி யென்றால், ஹிட்லரால் அதை ஈடு கட்ட முடியுமா? ஹிட்லர் தமது நீர் மூழ்கிப் படைகளின் சமர்த்தைக் குறித்துப் பிரமாத ஜம்பமடித்துக் கொண்டிருந்தார். அதெல்லாம் திண்ணை மீதமர்ந்துள்ள நொண்டியின் வாய் வீச்சுக்குச் சமானமாகி விட்டது. 'எழுந்து வந்தேன்னா இடுப்பை ஒடிச்சிடுவேன். போக்கிரித்தனம் பண்ணினால், வந்து மண்டையைப் பிளந்துடுவேன்' என்று நொண்டி சொன்னால், எவ்வளவு தூரம் அவனால் அவற்றைச் செய்ய சாத்யமாகும்? அதே போல் தான், நேசக் கப்பற் படை பிரஞ்சுக் கரைகளுக்குக் கூப்பிடு தூரத்திலிருக்கின்றன. ஆனாலும், நாஸி நீர்மூழ்கிகள் பொந்துகளிலிருந்து வெளிக் கிளம்பவே காணோம். பாவம்! அப்படியே கிடந்து அவை அவிந்து போக வேண்டி வந்தாலும் வரலாம். நேச தேச வீரர்கள் துணிந்து, அந்த நீர்மூழ்கிகள் பதுங்கிக் கிடக்கும் பொந்துகளின் வாய்களைக் கெட்டியாக அடைத்து விடவும் கூடுமல்லவா?

ஹிட்லர் தவிப்பு

யாருக்கு என்ன உத்திரவிடுவது என்பது கூடத் தெரியாமல் ஹிட்லர் இப்பொழுது தவித்துக் கொண்டிருக்கலாம். 'எல்லாம் நானே! அனைத்தையும் நானே நடத்துவேன்' என்றிருக்கும் ஹிட்லரிடமிருந்து உத்திரவுகள் எதுவும் வராவிட்டால், நாஸிப் படைத் தலைவர்களும், மற்றவர்களும் தான் என்ன செய்வார்கள்?

ஹிட்லரோ சமீபத்தில் தனது உயிருக்கு உலை வைக்கச் செய்யப்பட்ட சதி வெளியானதிலிருந்து தைரியமாக வெளியிலேயே வருவதில்லையாம். முஸோலினி, ஹிம்லர், கொயரிங் போன்ற ஒரு சிலர் மட்டுமே அவரது ரகசிய அறைக்குள் போக அனுமதிக்கப் படுகிறார்களாம். ஹிம்லர் தெரிந்தெடுத்த விஸ்வாச மிக்க வீரர்களின் பாதுகாப்புடனேயே, வெகு அவசியமான சமயங்களில் மட்டுமே, ஹிட்லர் வெளியே வருகிறாராம். அவர் பகிரங்கமாகத் தோன்றுவதற்காகக் குறிக்கப்படும் நேரங்களில் அவர் வழக்கமாகவே வருவதில்லையாம். அதற்கு முன்போ, பின்போ தான் வருகிறாராம். பல இடங்களில், ஒரு இமிடேஷன் ஹிட்லர் தான் பிரசன்னமாகிறாராம். அந்த ஹிட்லர் ஏதாவது இரண்டு வார்த்தைகளை முணுமுணுத்து விட்டு, பல்லைக் காட்டி விட்டுப் போய் விடுகிறாராம்.

தலைக்கு மேல் வெள்ளம்

தலைக்கு மேல் வெள்ளம் ஓடும் நிலைமை வந்துவிட்டது. இனி சாண் போனாலென்ன, முழம் போனாலென்ன என்று தான் ஹிட்லரும், அவரைச் சேர்ந்தவர்களும் எண்ணி யிருப்பார்கள். அந்த யோசனையுடன் தான் அவர்கள், ஜெர்மனியிலே பூரண ஆள் சேர்ப்புத் திட்டத்தை அமுல் படுத்தத் தொடங்கி யிருக்கலாம்.

'இன்னும் சில வாரங்களிலே அத்யாச்சரியமான சம்பவங்கள் சில நடைபெறலாம்; அசல் ஜெர்மனியிலேயே யுத்தங்கள் நடக்கலாம்' என்கின்றன தினசரிச் செய்திகள். இவ்வளவு காலம் வெறி பிடித்தவர்கள் போல் போராடி வந்த நாஸிகளுக்கும் கூட, இப்பொழுது சோர்வும், தோல்விதான் ஏற்படப் போகிறது என்ற உணர்ச்சியும் உண்டாகி யிருக்கலாம். ஆனால், பெர்லின் நகரத்திற்குள் நேசத் துருப்புகள் நுழையும் வரை, கடும் போர்கள் பல நடக்க வேண்டியிருக்கும். இப்போதைக்கு ருஷ்யர்கள் முன்னேறும் ஜோர்தான் பிரமிக்கத் தக்கதா யிருக்கிறது. எட்டி விட்டார்களே கிழக்கு பிரஷ்ய எல்லையை! என்! இந்தப் பத்திரிகை வெளிவரும் பொழுது செஞ்சேனை ஜெர்மனியைச் சேர்ந்த சில இடங்களைக் கூடப் பிடித்திருக்கக் கூடுமே! அணைகடந்த வெள்ளம் போலல்லவா அந்த அற்புத செஞ்சேனை முன்னே போய்க் கொண்டிருக்கிறது. வழியில் உள்ள தடங்கல்களையெல்லாம், ஏதோ சிறு குட்டிச் சுவர்களைக் கடப்பது போல், தாண்டித் தாண்டிச் செல்லுகிறார்கள் செஞ்சேனை வீரர்கள். இப்படியே இவர்கள் போய்க் கொண்டே இருக்கப்படாதா, யுத்தம் சீக்கிரமே முடியாதா என்று தானிருக்கிறது யுத்த அவதியே இல்லாமல், நேச தேசப் பாதுகாப்புடன் இருக்கும் நமக்கு! ஆனால், யுத்தம் அவ்வளவு எளிதில் முடிந்து விடுமா? அண்டை வீட்டானுடன் தொடுக்கும் சண்டைக்கு கோர்ட், கோர்ட் ஏறி ஒரு முடிவு காணவே பல வருஷங்களாவதுண்டே! இது உலக மகா யுத்தமாச்சே ஐயா!

மாகாண அரசாங்கக் கடன்கள்

1958-ம் வருஷத்திய 100-க்கு 3 வட்டிக் கடன்கள்

ஐக்கிய மாகாண	அரசாங்க	வெளியீடு	விலை ரூ.	99—8—0	ரூ.	350 லட்சம்.
பம்பாய்	,,	,,	,,	100—0—0	,,	344 ,,
பஞ்சாப்	,,	,,	,,	99—8—0	,,	270 ,,
சிந்து	,,	,,	,,	99—8—0	,,	200 ,,
சென்னை	,,	,,	,,	100—0—0	,,	110 ,,
மத்திய மாகாண பீரார்		,,	,,	100—0—0	,,	53½ ,,

ஒவ்வொரு கடனுக்கும் 1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி முதல் வட்டி கொடுக்கப்படும்.

1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி செவ்வாய்க் கிழமை ஒரே நாள் தான் இந்தக் கடன் பத்திரங்கள் விற்கப்படும். முழுத் தொகையும் ஏறக்குறைய வசூலான வுடனேயே, விற்பனை நின்று விடும்.

தொகைகள் ரொக்கமாக வேனும் செக்காக வேனும் கொடுக்கப்படலாம்.

பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை ஆகிய ஊர்களி லுள்ள ரிசர்வ் பாங்கி ஆபீஸ்களில் காலை 10-மணிமுதல் எல்லா (6) வகை கடன் பத்திர மனுக்களும் வாங்கிக் கொள்ளப்படும்.

மேற்கொண்டு கடன் பத்திரங்கள் வாங்க விரும்பினால், அந்தந்த மாகாணங்களி லுள்ள இம்பீரியல் பாங்கிக் கிளைகளுக்கு மனுச் செய்து கொள்ளலாம்.

எந்தக் கடனுக்காவது அதிகத் தொகை வசூலானால், விகிதாசாரப்படி கடன் கொடுத்தவர்களுக்குப் பகுதிகள் ஒதுக்கப்படும்.

குறிப்பு :—பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை ஆகிய இடங்களி லுள்ள இந்திய ரிசர்வ் பாங்கிக் காரியாலயங்களில் மனுக்கள் சமர்ப்பிக்கின்றவர்கள், கடன்களுக்கு வேண்டி யிருக்கும் தொகைகளுக்குமேல் அதிகப்படியாகப் பணம் சேர்ந்து விடுமானால், தங்களுடைய ரொக்கத்தை, தேவைப்படும் அளவிற்குப் பணம் சேராத அதே மதிப்புடைய பிறகடன்களுக்காவது அல்லது குறைவான வெளியீட்டு விலையுடைய கடன்களுக்காவது மாற்றிக் கொள்ள உரிமையுண்டு. ஆனால், இதற்காக, "விசேஷ உரிமைப் பத்திர" மொன்றைப் பூர்த்தி செய்து, தங்கள் மனுக்களோடு சேர்த்துச் சமர்ப்பிக்க வேண்டும். மனு நமூனாக்களையும் விசேஷ உரிமை நமூனாக்களையும் மேலே குறிப்பிடப்பட்டிருக்கும் இந்திய ரிசர்வ் பாங்கிக் காரியாலயங்களில் மனுச்செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மாகாண அரசாங்கங்களின் பொருள் நிலைமையை யறிவிக்கும் அரசாங்க அறிக்கைகளும், கடன்கள் பற்றிய விளம்பரங்களும், மனு நமூனாக்களும் கடன் பத்திர விற்பனைக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏற்ற இலாபந் தரத் தக்க முதலீடு

1958-ம் வருஷத்திய அரசாங்க 100-க்கு 3 வட்டி கடன் பத்திரங்கள் 1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி காலை 10-மணி முதல் விற்கப்படும். இது ஏற்றதோர் முதலீடு. எப்படி யென்றால், சென்னை மாகாண வருஷாந்தர வரி வசூல் தொகையான ரூ. 30 கோடியும் இதற்கு ஈடாயிருக்கிறது. இப்போது பணம் எளிதில் கிடைக்கிறது. பணம் வைத்திருக்கிறவர்கள் யாருக்குக் கடன் கொடுக்கலாமென்று தேடி யலைந்து கொண்டிருக்கிறார்கள். இந்தச் சமயத்தில் 100-க்கு 3 வட்டி கிடைக்கும் முதலீடு விரும்பத் தக்கது தான். ஒரு முதலீடு ஏற்றதாகவும் விரும்பத் தக்கதாகவும் மட்டுமிருந்தால் போதாது. முதலீடு செய்கிறவர் மனம் திருப்தி யடைகிறதற்கு இன்னும் பல அம்சங்கள் உண்டு. இந்தக் கடனுக்கு 100-க்கு 3 வட்டி என்பதே இதற்குப் போதுமான சிபார்சாகும்.

கடன் வாங்கப்படும் தொகைகள் இலாபந் தரத்தக்க துறைகளிலே தான் செலவு செய்யப்பட வேண்டுமென்பது தான் சென்னை மாகாண அரசாங்கத்தின் கொள்கையாகும். இதை யொட்டியே தான் கடன் வாங்கப்படுகிறது. இந்தியா அரசாங்கத்தார் சென்னை அரசாங்கத்திற் தக் கொடுத்திருக்கும் கடனுக்கு வட்டி வருஷத்திற்கு 100-க்கு 4½. 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்பு பலன் தரத்தக்க அசல் செலவுகளை முன்னிட்டு வாங்கப்பட்டவை, இந்தக் கடன்கள். இப்போது வாங்கப்படும் கடன் தொகை முழுவதையும் கொண்டு இந்தக் கடன் உளவடைக்கப்படும். அந்தக் கடனில் 464·54 லட்சந் தான் இன்னும் பாக்கி யிருக்கிறது. அந்தக் கடன் 1937–38 முதல் அரை வருஷத்திற் கொரு முறை தவணையாகத் திருப்பிக் கொடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது.

அரை வருஷத்திற் கொரு முறை திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகள் மட்டுமன்றி, 1942–43, 1943–44-ம் வருஷங்களில் 250·10 லட்சங்கள் முன் பணமாகக் கொடுத்திருக்கிறது. பாக்கி யிருக்குந் தொகையை அரை வருஷத் தவணையாக ரூ. 25½ லட்சம் வீதம் செலுத்திக் கொண்டே வந்தால், கடன் முழுதும் உளவடைந்து விடும். இந்தக் கடன்கள் முழுதும் தீர்ந்து போய்விட்டால், இந்த மாகாண வருவாயி லிருந்து இப்படிப்பட்ட பெருஞ் செலவுகள் இராது. இந்தக் கடனில் போடும் முதலுக்கும் பழுதில்லை. அதற்கு வட்டியும் காலா காலத்தில் வந்து கொண்டிருக்கும். ஆகையால் புத்திசாலிகளாயுள்ள முதலீட்டுக்காரர்கள், விரைவில் இதில் முதலீடு **செய்வார்களாக!**

100-க்கு 3 வட்டி சென்னை அரசாங்க கடன்



லண்டனில் ப்ளீட் தெருவுக்குக் கால் மைல் தூரத்திற்கப்பால் வெடிகுண்டு விழுந்தும், அங்குள்ளவர்கள் சர்வ சாதாரணமாக எதுவும் நடவாதது போல தத்தம் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருக்கிருர்கள்.

1. பயன் தரத்தக்க செலவுகளை முன்னிட்டு மத்திய அரசாங்கத்தாரிடமிருந்து 1937-ம் வருஷம் எப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முன்பு வாங்கப்பட்ட கடன்களைத் திருப்பிக் கொடுக்கும் பொருட்டே இந்தக் கடன் தொகைகள் செலவிடப்படும்.

2. 1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டத்தின் 163 (1)-வது விதிப்படி சென்னை மாகாண வரிகளை ஈடு காட்டி இந்தக் கடன் வாங்கப்படுகிறது.

1935-ம் வருஷத்திய இந்திய அரசாங்கச் சட்டத்தின் 163 (3)-வது விதியில் கூறப்பட்டிருக்கிறபடி மத்திய அரசாங்கத்தின் அனுமதி பெற்றே இக்கடன்கள் வாங்கப்படுகின்றன.

3. இந்தக் கடன், 1958-ம் வருஷத்திய 100-க்கு 3 வட்டி சென்னை அரசாங்கக் கடன் என்று பெயர் பெறும்.

4. இந்தக் கடனின் மொத்தத் தொகை ரூ. 110 லட்சம்.

5. கோரப்படும் ஒவ்வொரு 100 ரூபாய்ப் பத்திரத்திற்கும் விலை ரூ. 100.

6. இதற்கான தொகைகள் 1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி மட்டும் தான் பெற்றுக் கொள்ளப்படும். முழுத் தொகையும் அதாவது ஏறக் குறைய 110 லட்ச ரூபாய் வசூலான உடனேயே கடன் பத்திர விற்பனை முன்னறிவிப்பில்லாமலேயே நிறுத்தப்படும். எப்படியிருந்தாலும் 1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி அலுவல் நேரம் முடியும் முன்னமேயே நிறுத்தி விடப்படும்.

7. மொத்த வசூல் 110 லட்சத்திற்கு அதிகப்பட்டால் பகுதித் தொகைக்குத் தான் பத்திரங்கள் விற்கப்படும். அப்போது பத்திரம் விற்ருன பிறகு, உபரித் தொகை திருப்பிக் கொடுக்கப்படும். இப்படித் திருப்பிக் கொடுக்கப்படும் தொகைகளுக்கு வட்டி கொடுக்கப்படமாட்டாது.

8. இந்தக் கடன், 1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி முதல் 1958-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதிவரை 14 வருஷங்களுக்கு செல்லுபடியாகும்.

9. 1944-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதி முதல், வருஷத்திற்கு 100-க்கு 3 வீதம் வட்டி கொடுக்கப்படும். வட்டித் தொகை அரை வருஷத்திற்கொருதரம் பிப்பிரவரி மாதம் 15-ம் தேதியும் ஆகஸ்ட்டு மாதம் 15-ம் தேதியும் கொடுக்கப்படும். இந்தத் தொகைக்கு வருமான வரியும் அதிகப்படி வருமான வரியுமுண்டு. வருமான வரி செலுத்த வேண்டாதவர்களிடமிருந்து முழுத் தொகை வசூலிக்கப்பட்டிருந்தாலும், குறைந்த விதிப்படிக்கின்றி அதிகத் தொகை வசூலிக்கப்பட்டவர்களிடமிருந்தும், அவர்களிடம் பெற்ற உபரித் தொகைகள் திருப்பிக் கொடுக்கப்படும். கடன் பத்திரங்கள் வாங்கியுள்ளவர்கள் ஜில்லா வருமான வரி அதிகாரிக்கு மனுச் செய்து கொண்டால், அவர் ஒரு சர்டிபிகேட் கொடுப்பார். அதைக் கொண்டு, வருமான வரி விகிதம் குறைத்துக் கொள்ளப்படும்.

10. சென்னை மாகாணத்திலுள்ள எந்த டிரஷரியிலும் சப்-டிரஷரியிலும், பெங்களூர், திருவனந்தபுரம், ஹைதராபாத் (டெக்கான்) மத்திய டிரஷரிகளிலும், சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய ஊர்களிலுள்ள அரசாங்கக் கடன் காரியாலயங்களிலும் வட்டித் தொகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

11. இந்தக் கடன் பத்திரங்கள் இரண்டு வகைப்படும் :—

(1) கடன் பத்திரங்கள். இதற்கு மனுச் செய்து கொள்ளுகிறவர்களுக்கு கடன் பத்திர சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும்.

(2) அரசாங்க பிராமிசரி நோட்டுகள். கடன் கொடுக்கிறவர்கள் இவ்விரண்டில் எது வேண்டுமென்று குறிப்பிடாதிருந்தால், சாதாரணமாக, பிராமிசரி நோட்டுகள் தான் வழங்கப்படும். ஒருவர் பேரிலிருக்கும் பிராமிசரி நோட்டை மற்றொருவர் பேருக்கு மாற்றிக் கொள்ளலாம். இந்த நோட்டுகள் ரூ. 100, ரூ. 500, ரூ. 1,000 ரூ. 5,000, ரூ. 10,000, ரூ. 25,000, ரூ. 50,000, ரூ. 1,00,000-க்குக் கொடுக்கப்படும்.

12. (1) மனுக்கள் நூற்றுக்கணக்கான தொகைகளுக்குத் தான் போடப்படவேண்டும்.

(2) சென்னை மாகாணத்திலுள்ள இம்பீரில் பாங்கிகளிலும், அனந்தப்பூர், சித்தூர், கர்னூல், தஞ்சாவூர் ஆகிய ஊர்களிலுள்ள இம்பீரியல் பாங்கி பட்டுவாடா காரியாலயங்களிலும், பெங்களூர், திருவனந்தபுரம், ஹைதராபாத் (டெக்கன்) ஆகிய இடங்களிலுள்ள இம்பீரியல் பாங்கிக் கிளைகளிலும் சென்னை, பம்பாய்,

(12-ம் பக்கம் பார்க்க)

யுத்த நாட் குறிப்புக்கள்

பிரிட்டனும் ஜெர்மனியும்.

ஆகஸ்ட்டு 2.—மிஸ்டர் சர்ச்சில் காமன்ஸ் சபையில் யுத்த நிலைமையை விளக்கிப் பேசினார்.

ஆகஸ்ட்டு 3.—மன்னர் பிரான் இத்தாலியிலிருந்து திரும்பி வந்து சேர்ந்தார்.

ஆகஸ்ட்டு 4.—நேற்றும் இன்றும் நடைபெற்ற நாஜி கூட்டத்தில் ஹிட்லர், கோப்பல்ஸ், டாக்டர் ஸ்பீயர் ஆகியோர் பேசினர்.

ஆகஸ்ட்டு 6.—ரெய்ச் தலைவர்களுக்கு சென்ற வெள்ளிக்கிழமை ஹிட்லர் ஒரு பிரசங்கம் செய்ததாகத் தெரிகிறது.

ஆகஸ்ட்டு 8.—பறக்கும் குண்டுகளால் பாதகமடைந்த லண்டன் பகுதிகளிலிருந்து, 17,000 தாய்மார்களும் குழந்தைகளும் வெளியேறினார்கள்.

ஹிட்லரைக் கொல்ல முயற்சி செய்ததாக 8 ஜெர்மன் படைத் தலைவர்கள் கொல்லப்பட்டார்கள்.

அமெரிக்காவும், அட்லாண்டிக்கும்.

ஆகஸ்ட்டு 1.—உடனடியாக அமெரிக்க தளவாட உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று அமெரிக்க இராணுவ சப்ளை யதிகாரி குறிப்பிட்டார்.

ஆகஸ்ட்டு 7.—ஆகஸ்ட்டு மாதம் 14-ம் தேதி நடைபெற விருக்கும், 4 வல்லரசுகள் கூடி யுத்தத்திற்குப் பிறகு பாதுகாக்க வேண்டி எப்படிப்பட்ட ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென்று யோசிக்கும் பொருட்டு கூட்டப்பட்டிருந்த மகா நாடு, ரஷ்யாவும் கலந்து கொள்ள அவகாசமளிக்கும் பொருட்டு, 21-ம் தேதிக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா, பர்மா, இலங்கை.

ஆகஸ்ட்டு 4.—மியிட்கியானா கைப்பற்றப் பட்டது.

ஆகஸ்ட்டு 5.—வெய்ங்மாவில் மூன்றில் இரண்டு பங்கை சீனப் படைகள் கைப்பற்றி விட்டன.

ஆகஸ்ட்டு 6.—டாமுவை 14-ம் படை கைப்பற்றியது. வெய்ங்மா முழுதும் நேசப்படை வசமானது.

ஆகஸ்ட்டு 7.—டயகோன், நம்படாங் இவ் விருவிடங்களும் நேசப் படைகள் வசமாயின.

ரஷ்யாவும், பின்லாந்தும்.

ஆகஸ்ட்டு 1.—லிவானி, டுகும்; டுபேன், கலுசின் முதலிய 800 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

போலந்துக்கும் ரஷ்யாவுக்கும் எப்படிப்பட்ட உறவு அமைய வேண்டுமென்பது பற்றி நிர்ணயிக்க போலந்து முதன் மந்திரி மாஸ்கோ வந்து சேர்ந்தார்.

ஆகஸ்ட்டு 2.—போலந்து தலைவர் ரைட்டி தன் பதவியை ராஜிநாமாச் செய்து விட்டார். இப்போது மார்ஷல் மானர்ஹீம் அப்பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

ஆகஸ்ட்டு 4.—போலந்து முதன்மந்திரி, அன்னிய நாட்டு மந்திரி, தேசீயக் கௌன்சில் தலைவர் ஆகியோரை ஸ்டாலினும் மலோடோவும் வரவேற்றனர்.

ஆகஸ்ட்டு 5.—ஸ்ட்ரூஸ், ரோப்ட் பஸ், டாங்கேப் செக், ரஸ்வ டேவ், டார்னோப்ரெசெக் ஆகிய ஊர்களை ரஷ்யப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 6.—ட்ரோஹோ பெஸ், மிலெக், மெடினஸ் முதலிய 200 இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 7.—போர்ஸ்லா, சாம்பூர், குரென்சாஜ், சப்கியானி, க்னிசைன், லபி முதலிய இடங்களை சோவியத் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 8.—போலந்தின் தலைவராக டோமாசி ஆர்சிஸ்ஸீயுஸ்கி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இத்தாலி, ஆப்பிரிக்கா, மத்தியதரைக் கடல் பகுதி.

ஆகஸ்ட்டு 2.—காஸ்டிக்லியானோவை இந்தியப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 3.—சினென்ட்ராவையும் ஸ்ட்ராடாவையும் நேசப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 4.—இம்புருனெட்டா, மாண்டிபானி, இன்சிஸா ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 6.—இம்போலிக்குள் இந்தியப் படைகள் நுழைந்தன. மௌண்ட் அல்டச்ஸியானை 8-ம் படையும், சிபலோனோவை போலந்து படைகளும் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 7.—ப்ளாரென்சில் உள் நாட்டுக் கலவரம் கொழுந்து விட்டெரிகிறது.

விஷி, சுயேசசை பிரான்சு, எதிரி வயப்பட்ட நாடுகள்.

ஆகஸ்ட்டு 2.—ப்ரன்டர்சன், வில்லா டிவ், எஸ்டரி, லா பெனி பொகேஜ், பூகெனலெஸ், சூர் சுயெல்ஸ், பெர்ஸி, டெர்ஸி ஆகியவற்றை நேசப் படைகள் கைப் பற்றின.

ஆகஸ்ட்டு 3.—ரென்னிஸ், வயர், லா மெஸ்னில் ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 4.—பெனகர்ஸ், போ மெஸ்னில், மார்டைன ஆகியவற்றை நேசப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 5.—ஆனே சுர் ஒடோன் கைப்பற்றப்பட்டது. நார்மண்டிக்குப் போயிருந்த மிஸ்டர் அட்லி இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தார்.

ஆகஸ்ட்டு 6.—லவால், மேயீன், காட் காண்டியர் என்னுமிடங்கள் கைப்பற்றப் பட்டன.

விஷியை விட்டுக் இளம்பும்படி பிரஞ்சு அரசாங்கத்திற்கு ஜெர்மன் கட்டளை பிறந்திருக்கிறது.

ஆகஸ்ட்டு 7.—மாண்ட் பிங்கான், செண்ட் ப்ரியுக், ஆரே ஹியல் கோட் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

ஆகஸ்ட்டு 8.—லா ஹோக், செண்ட் அயிக்னன், டிலா மெஸ்னில் செக்வி வில்லா கம்பெக்னே ஆகியவை கைப் பற்றப் பட்டன.

நடு நிலைமை நாடுகள்.

ஆகஸ்ட்டு 2.—துருக்கி நேச நாடுகளுடன் சேர்ந்து விட்டது. வான் பேப்பன் அங்காராவை விட்டுக் கிளம்பினார்.

ஆகஸ்ட்டு 3.—ஸ்பெய்ன் தேசத்து மந்திரி கௌண்ட் ஜார்டோனா காலமானார்.

தூரக் கிழக்கு நாடுகள்

ஆகஸ்ட்டு 1.—புதிதாக நியமனம் பெற்ற ஜப்பானிய உள் நாட்டு மந்திரி, 48 மாகாணங்களில் உள்ள கவர்னர்களில் 18 பேர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

ஆகஸ்ட்டு 2.—குவாமில் உள்ள நேசப் படைகள் இடானோ, பரடோ, புலான், நெய்ட் என்னும் இடங்களை நேசப் படைகள் கைப்பற்றின.

டெங்சுங்கிலுள்ள விமான நிலையத்தை சீனப் படைகள் கைப்பற்றின.

ஆகஸ்ட்டு 3.—ஜப்பானிய கப்பற் படை உத்தியோகத் தலைவராக அட்மிரல் கோஷ்ரோ ஆய்கவா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

(11-ம் பக்கம் தொடர்ச்சி)

கல்கத்தா, டில்லி ஆகிய இடங்களிலுள்ள ரிசர்வ் பாங்கிகளிலும் மனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

(3) 2-வது உள் பாராவில் கூறப்பட்டிருக்கும் காரியாலயங்களில் அச்சிட்ட மனு நமூனாக்கள் கிடைக்கும். அல்லது, தொகை, ஜாமீன் கோரப்படும் விவரம், மனுதாரின் முழுப் பெயர், விலாசம், தனக்கு எந்தக் காரியாலயத்தில் அல்லது டிரஷரி அல்லது சப்- டிரஷரியில் வட்டித் தொகை பட்டுவாடா செய்யப்படவேண்டுமென்ற தகவல்கள் இவற்றைக் குறித்து சாதாரண காயிதத்திலும் மனுச் செய்து கொள்ளலாம்.

13. மனுவுடன் கடன் கொடுக்கும் தொகையை ரொக்கமாகவோ செக்காகவோ கட்டிவிட வேண்டும். செக்குகள் இம்பீரியல் பாங்கி அல்லது ரிசர்வ் பாங்கியின் பேருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

மனுத் தொகையின் பொருட்டுக் கொடுக்கப்படும் செக், ரொக்கமாக மாறுகிறவரை ஜாமீன் பத்திரம் வழங்கப்பட மாட்டாது.

14. அங்கீகரிக்கப்பட்ட பாங்கர்கள் அல்லது தரகர்கள் ஆபீஸ் முத்திரையோடு வந்து சேரும் மனுத் தொகையில் 8,000-க்கு 1 வீதம் தரகு கொடுக்கப்படும்.

15. 1945-46 முதல் 1957-58 வரை வருஷந்தோறும், மொத்தக் கடன் தொகையில் 100-க்கு $1\frac{1}{2}$ விகிதம் சென்னை அரசாங்கத்தார் ஒதுக்கி வைப்பார்கள். இத்தொகையைக் கொண்டு ரத்து செய்யப்படும் கடன் பத்திரங்களுக்கு ரொக்கம் கொடுக்கப்படும்.

16. வெளியாரிடத்தில் சென்னை அரசாங்கத்தார் வாங்கி யிருக்கும் கடனைத் தீர்க்கும் பொருட்டு வருஷந் தோறும் மீட்சி நிதிக்கு ஒரு தொகையை சென்னை அரசாங்கத்தார் ஒதுக்கி வைப்பார்கள்.

PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS AND PUBLISHED BY THE DIRECTOR OF WAR PUBLICITY, "VICTORY HOUSE", MOUNT ROAD, MADRAS.